தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 358/ந/2023
நாள் 12.12.2023

திரு. S. சூசை மாணிக்கம்
மற்றும் 4 நபர்கள்,
மணப்பாறை,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மணப்பாறை நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, மதுரை ரோடு, சந்தியாகுபுரம், சிலம்பக்காரகளம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. சூசை மாணிக்கம் மற்றும் 4 நபர்களின் 05.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.09.2023 அன்று பெறப்பட்டு, 358/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, மதுரை ரோடு, சந்தியாகுபுரம், சிலம்பக்காரகளம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. சூசை மாணிக்கம் மற்றும் 4 நபர்கள் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளனர்:–

"திருச்சி மாவட்டம், மணப்பாறை நகராட்சி, வார்டு எண்.24 சந்தியாகுபுரம், சிலம்பக்கார தெருவில் இருந்து பெருமாள் கோவில் வரை தார்சாலை அமைப்பதாகவும் அதற்கான இடத்தை எடுப்பதற்கு மணப்பாறை நகராட்சியினர் சர்வே செய்வதாகவும் தெரிய வந்துள்ளது. மேற்கண்ட தார்சாலை அமைக்க சர்வே செய்யும் இடத்தில் சர்வே எண்கள் 663/3பா, 665/3பா, 666/3/4பா மற்றும் 668/3பா, 4பா (புதிய நகரபுல எண். 10-12,13-7, 13-11, 13-13, 14-2, 14-7 ) கொண்ட இடமானது எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு எங்கள் தந்தை ராயப்பன் மகன் சாமிமுத்து என்பவருக்கு சொந்தமான இடமாகும். அதற்கான பட்டா எங்களிடம் உள்ளது. எனவே, மேற்கண்ட எங்கள் இடத்தில் தார்சாலை அமைக்காமல் இருப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மணப்பாறை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

மணப்பாறை நகராட்சி ஆணையாளர் தனது 29.11.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 சந்தியாகுபுரம், சிலம்பக்கார தெருவில் இருந்து பெருமாள் கோவில் வரை தார்சாலை அமைக்க சர்வே செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. அன்றைய தினத்தில் மனுதாரர் தன்னுடைய இடத்தில் தார்சாலை அமைக்க கூடாது என்று தெரிவித்தார்கள். மனுதாரர்கள் கோரப்பட்ட இடத்தில் எவ்விதமான பணியும் செய்யவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரர்களும் மற்றும் மணப்பாறை நகராட்சி ஆணையரும் 30.11.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர்களான திரு. S. சூசை மாணிக்கம் மற்றும் நால்வரில் எவரும் 30.11.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

(5) எதிர்மனுதாரரான மணப்பாறை நகராட்சி ஆணையர் சார்பாக பொதுப்பணி மேற்பார்வையாளராகப் பணியாற்றும் திருமதி. ரஞ்சினி என்பவர் 30.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை நகராட்சி வார்டு எண் 24 சந்தியாகுபுரம் சிலம்பக்கார தெருவில் வசித்துவரும் மனுதாரர்கள் சூசை மாணிக்கம் மற்றும் நால்வர் தங்களுக்கு சொந்தமான பட்டா இடத்தில் மணப்பாறை நகராட்சியால் தார்சாலை அமைக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்து மேற்கண்ட தார் சாலை நகராட்சியால் அமைக்கக்கூடாது என மனு அளித்துள்ளனர். இதனைபடுத்து மேற்கண்ட இடம் கள ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள சர்வே எண்கள் 663/3பா, 665/3பா, 666/3/4பா மற்றும் 668/3/4பா (புதிய நகர புலஎண்ணும் உட்பிரிவும் 10-12,13-7, 13-11, 13-13, 14-2, 14-7 ) ஆகிய இடங்களில் நகராட்சியால் எவ்விதமான சாலைப் பணியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்றேன்.

இந்நேர்வு குறித்து மணப்பாறை வட்டாட்சியர் அலுவலக நகர சார் ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட Town Survey Land Register நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மணப்பாறை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையைச் சார்ந்த மனுதாரர் திரு.S.சூசை மாணிக்கம் என்பவரும் மற்றும் அவரது 3 சகோதரர்கள் மற்றும் 1 சகோதரி ஆகிய ஐவரும் சேர்ந்து 05.09.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட தங்களுக்கு சொந்தமான புல எண்கள். 663/3பா, 665/3பா, 666/3/4பா, 668/3பா, 4பா (புதிய

நகர்புல எண்.10–12, 13–7, 13–11, 13–13, 14–2 மற்றும் 14–7) கொண்ட பட்டா நிலத்தில் மணப்பாறை நகராட்சியினர் தார்சாலை அமைக்க முயற்சி செய்வதாக அறிய வருகிறது என புகார் தெரிவித்து, தார்சாலை அமைக்காமல் இருக்க ஆவன செய்யுமாறு கோரியுள்ளனர்.

மனுதாரரின் மேற்காணும் புகார் மனு மணப்பாறை நகராட்சியால் பெறப்பட்டதும், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடத்தினை கள ஆய்வு செய்தும் மற்றும் மணப்பாறை வட்டாட்சியர் அலுவலக நகர சார்ஆய்வாளரின் களஆய்வு செய்த 29.11.2023 நாளிட்ட அறிக்கையின் அடிப்படையிலும் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள சர்வே எண்கள். 663/3பா, 665/3பா, 666–3/4பா, 668/3பா, 4பா (புதிய நகர்புல எண்.10–12, 13–7, 13–11, 13–13, 14–2 மற்றும் 14–7) ஆகிய இடங்களில் நகராட்சியினரால் எவ்வித தார்சாலை அமைப்பதற்கான பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என நகராட்சி ஆணையாளரின் அறிக்கையின் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நிலையில், மனுதாரரின் புகாருக்கு எவ்வித ஆதார ஆவணங்களும் இல்லாததால், மணப்பாறை நகராட்சி ஆணையாளரின் அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S. சூசை மாணிக்கம்,
24, சந்தியாகுபுரம், சிலம்பக்காரகளம்,
மதுரை ரோடு, மணப்பாறை – 621 306,
திருச்சி மாவட்டம்.

2) ஆணையாளர்,
மணப்பாறை நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

13/12/23